# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0035/2016/ந

ஆணை எண்: 69/2016

நாள்: 13/ 04 /2016

பொதுமக்கள்,
ஆலந்தூர். – முறையீட்டு மனுதாரர்

திரு.சிவகுமார்,
நகரமைப்பு திட்ட அலுவலர்,
பல்லாவரம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

பொது மக்கள் ஆலந்தூர் எனக் குறிப்பிட்டு பல்லாவரம் நகராட்சியின் நகரமைப்பு திட்ட அலுவலர் திரு.சிவகுமார் என்பவர் மீது 12.01.2016 அன்று வரப்பெற்ற ஊழல் மற்றும் போலி சாதிச்சான்று குறித்து வரப்பெற்ற முறையீடு தொடர்பாக இம்முறை மன்ற நடுவத்தால் முறையாக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடி.ப்படையிலும் இம்முறைமன்ற நடுவம் கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

**ஆணை**

1. 19.01.2016 அன்று ''பொதுமக்கள் ஆலந்தூர்'' எனக் குறிப்பிட்டு வரப்பெற்ற முறையீட்டில் பல்லாவரம் நகராட்சியில் பணிபுரியும் திரு.க.சிவகுமார், நகரமைப்பு திட்ட அலுவலர் அளவுக்கு அதிகமான சொத்துக்கள் சேர்த்துள்ளதாக ஊழல் புகார்களும் , அரசியல் கட்சி தொடர்பு குறித்தும் போலி சாதி சான்றிதழ் அளித்துள்ளதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேற்படி புகார்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர் 10.03.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தால் விசாரிக்கப்பட்டார். விசாரணையின்போது மேற்படி அலுவலர் தனது எழுத்துப்பூர்வமான விளக்கங்களை சமர்ப்பித்துள்ளார். மேலும், காழ்ப்புணர்ச்சி காரணமாக ஒரு சில அலுவலர்கள் திட்டமிட்டு பொய் புகார்களை அறித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேற்படி அலுவலர் 16.03.2016 அன்று இம்முறைமன்றம் அறிவுறுத்தியவாறு மீண்டும் ஆஜராகி கிழக்கு தாம்பரத்தில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் ஒரு குடியிருப்பினை (Flat) வாங்கிக் கொள்வதற்கான நிதி உதவி விவரங்கள் அடங்கிய அனுமதிக் கடிதம் நகராட்சி நிர்வாக ஆணையரால் 03.02.2005–ல் வழங்கப்பட்டுள்ளதெனக் குறிப்பிட்டு அதன் நகலினையும், சிதம்பரம் நகராட்சி ஆணையரால் 24.11.1984 ல் பிறப்பிக்கப்பட்ட தனியரது பணி நியமன ஆணையின் நகலினையும் சமர்ப்பித்தார்.

4. சிதம்பரம் நகராட்சி ஆணையரால் கடித எண். ந.க.8166/10/சி1, நாள்.28.10.2010–ன் வாயிலாக தகவல் அறியும் உரிமைச்சட்ட மனு ஒன்றிற்கான பதிலில் மேற்படி அலுவலர் இதர வகுப்பினைச் (FC) சார்ந்தவரல்ல எனவும் சோழிய வெள்ளாளர் எனும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்படி அலுவல்ரது செயல்பாடுகள் குறித்து பல்லாவரம் நகராட்சி ஆணையரிடமிருந்து இம்முறைமன்ற நடுவத்தால் அறிக்கை கோரப்பட்டது.

5. பல்லவபுரம் நகராட்சி ஆணையரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையில் (ந.க.எண்.1786/2016/சி1, நாள் 31.03.2016) தனியரது பணி விவரங்களும், சாதி சான்று குறித்த பணிப்பதிவேடு விவரங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தனியர் எந்தவித புகாருக்கும் இடமின்றி செவ்வனே பணி புரிவதாகவும் , எந்த அரசியல் தொடர்பும் இல்லையெனவும் , சமூக விரோதிகள் தொடர்பு இல்லையெனவும் , ரியல் எஸ்டேட் தொழில்

புரிபவரல்ல எனவும், தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கை/ குற்றச்சாட்டுகளுக்கும் இடமின்றி பணிபுரிவதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். மேலும், மேற்படி அலுவலர் மீது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களில் உண்மையில்லை எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

6. முறையீடு மனுவில் 'ஆலந்தூர் பொதுமக்கள்' என மட்டுமே குறிப்பிடப்பட்டு கையொப்பமோ, முகவரியோ குறிப்பிடப்படவில்லை. மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீடு தாக்கல் வழிமுறை , விசாரணை மற்றும் தீர்வு ) விதிகள் 2015ன் விதி 6–ல் நிர்ணயிக்கப்பட்டவறான நீதிமன்ற கட்டண வில்லை முறையீட்டில் ஒட்டப்படவில்லை. முகவரியற்ற நிலையில் மனுதாரர் என எவரையும் விசாரிக்க இயலாத நிலையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும், நகராட்சி ஆணையரது அறிக்கை / பரிந்துரையின் அடிப்படையிலும் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் ஆகியவைகளின் படி மேல் நடவடிக்கை ஏதுமின்றி இம்முறையீட்டினை முற்றாக்கலாமென ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு முத்திரையிடப்பட்டு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலருக்காக

பெறுநர்

1. திரு.க.சிவகுமார்,
   நகரமைப்புத் திட்ட அலுவலர்,
   பல்லவபுரம் நகராட்சி,
   குரோம்பேட்டை, சென்னை.

2. நகராட்சி ஆணையர்,
   பல்லவபுரம் நகராட்சி,
   குரோம்பேட்டை, சென்னை.